உ

சிவமயம்.

# வச்சணந்திமாலையென்னும்

## வெண்பாப்பாட்டியல்

மூலமும் உரையும்.

# வரையறுத்தபாட்டியல்

மூலமும், உரையும்.

இவை,

இயற்றமிழாசிரியராகிய

திருத்தணிகை

**விசாகப்பெருமாளையரவர்கள்,**

முன்னிலையில்

தில்லையம்பூர்ச்

**சந்திரசேகர கவிராஜபண்டித**

ரவர்களால்,

பரிசோதிக்கப்பட்டுப்

புத்தகபரிபாலனசபைத்தலைவராகிய

மணலி,

**பெரியதம்பிமுதலியா ரவர்களால்**

ஆறுகாடு,

முத்தியாலுநாயகரது

வாணிநிகேதனஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

துந்துபி௵ ஆவணிமீ

இரண்டாம்பதிப்பு.

உ

சிவமயம்.

வச்சணந்திமாலையென்னும்,

# வெண்பாப்பாட்டியல்

மூலமும், — உரையும்.

முதலாவது

## முதன்மொழியியல்.

பாயிரம்.

மதிகொண்டமுக்குடைக்கீழ்வாமன்மலர்த்தாள்
துதிகொண்டுநாளுந்தொழுது, நுதிகொண்ட
பல்கதிர்வேலுண்கண்ணாய்பாட்டியலைக்கட்டுரைப்பன்
தொல்லுலகின்மீதேதொகுத்து

(என்பதுசூத்திரம்) யாதானுமொரு நூலுரைக்குமிடத்துப் பாயிரமுரைத்துரைக்கவென்பதுமரபு. பாயிரமென்பதுமுகவுரை. அப்பாயிரம்,பொதுவுஞ்சிறப்புமென விருவகைப்படும்.அவற்றுட் பொதுப்பாயிர நான்குவகைப்படும். "ஈவோன்றன்மையீதலியற்கை, கொள்வோன்றன்மை கோடன்மரபென, வீரிரண்டென்பபொதுவின்றொகையே." என்றாராகலின். இவற்றுள், ஈவோன்றன்மை ஆசிரியனிலக்கணம், ஈதலியற்கை அவன் வித்தைகொடுக்குமுறைமை, கொள்வோன்றன்மை மாணாக்கனிலக்கணம், கோடன்மரபு அவன்வித்தைகொள்ளுமுறைமை. ஆசிரியரிருதிறத்தர், கற்கப்படுவோரும், கற்கப்படாதோருமென. அவருட்கற்கப்படுமாசிரியர் நான்குதிறத்தர். "மலைநிலம்பூவே துலாக்கோலென்றின்ன, நலைவிலுணர்வுடையோர்" கற்கப்படாவாசிரியர் நான்குதிறத்தர். "கழற்பெய்குடமே மடற்பனைமுடத்தெங்கு, குண்டிகைப் பருத்திபோடிவையனையாரே" மாணாக்கருமிருதிறத்தர், கற்பிக்கப்படுவோரும். கற்பிக்கப்படாதோருமென" அவருட்கற்பிக்கப்படு மாணாக்கரறுவகையர். "தன்மகனாசான் மகனேமன்மகன், பொருணனிகொடுப்போன் வழிபடுவோனே, யுரைகொளாளரோடிவ ரெனமொழிப." இவர்குணம். "அன்னங்கிளியே நன்னிறநெய்யரி, யானையானே றென்றிவைபோலக், கூறிக்கொள்வர் குணமாண்டோரே." கற்பிக்கப்படாமாணாக்கரெண்வகையர்-(வெ) "மடிமாணிபொச்சாப்பன் காமுகன்கள்வ, னடுநோய்பிணியாளனாருச்சினத்தன், றடுமாறுநெஞ்சத்தவனுள்ளிட்டெண்மர், நெடுநூலைக்கற்கலாகார்" ஆசிரியனீயுமுறைமை. "ஈதலியல்பேயியல் புறக்கிளப்பின், பொழிப்பேயகல மெச்சநுட்பமெனப், பழிப்பில்பல்லுரைபயின்றநாவினன், புகழ்ந்தமதியிற்றிகழ்ந்தநாளிற், றெளிந்தவறிவினன் றெய்வம்வாழ்த்திக், கொள்வோனுணரும்வகையறிந்தவன்வயிற், கொள்வரக்கொடுத்தன் மரபெனமொழிப." கொள்வோன்முறைமை. "கொள்வோன்றன்மை கூறுங்காலைப் பொழுதொடுசென்று வழிப

டணழுனியான், முன்னும்பின்னு மிரவினும்பகலினு, மகலாகுகியன்பொரிபு ணர்ந்தாங், காசறவுணர்ந்தோன் வாவெனவந்தாங்,கிருவெனவிருந்து சொல் லெனச்சொல்லி,நெஞ்சுகளனுகச் செவிவாயாகக், கேட்டவை கேட்டவைவல வனுகிக், கொடுத்தனகோடலவன துபண்பே." இவையெல்லா நூன்முகத்து முணைக்கப்படுதலிற் பொதுப்பாயிரமாம். இனிச்சிறப்புப்பாயிர மெண்வகைப் படும். "ஆக்கியோன் பெயரேவழியேயெல்லை, நூற்பெயர்யாப்பேநுதலிய பொருளே, கேட்போர் பயனேடாயெண்பொருளும், வாய்ப்பக்காட்டல்பாயி ரத்தியல்பே'' என்றாராகலின். அன்றியும் இவ்வெட்டுடன், காலம், களன், காரணமென்னும்இம் மூன்றையுங்கூட்டிப்பதினொன்றென்பாருமுளர்."காலங் களனேகாரணமென்றிம் மூவகையேற்றிமொழிநருமுளரே'' என்றாராகலின். அவற்றுள், ஆக்கியோன்பெயரென்பது நூல்செய்த ஆசிரியன்பெயர், இந்நூ ல்யாராற்செய்யப்பட்டதோவெனின், கற்றவர்புகழுங் களந்தையென்பெரும் பதிக், குற்றமில்வாய்மைக் குணவீரபண்டிதனென்னும் ஆசிரியனுற்செய்யப் பட்டது. வழியேயென்பது, இன்னதின்வழித்தென்றல்.இஃது, எந்நூல்வழி த்தோவெனின், இந்திரகாளியென்னும்பாட்டியன்மரபின்வழித்து. எல்லையெ ன்பது நடக்குமெல்லை. இஃது, எவ்வெல்லையினடக்குமோவெனின், தமிழ்வ ழங்குமிடமெங்குமெண்க. நூற்பெயரென்பது நூலினதுபெயரிதுவென்றல். இந்நூல் என்னபெயர்த்தோவெனின், எய்தியமணிப்பூணிலங்குமணி நெடுந் தேர் வேந்தர்சூடும் விரைகெழுமலர்த்தாள்,விளங்கெழின்மாடத்துக்களந்தை யெம்பெருமான், வளர்ந்தகீர்த்தி வச்சணந்திதேவனென்னுமாமுனிசெய்வித்த தனுல், வச்சணந்திமாலையென்னும் பெயர்த்து. யாப்பென்பது, தொகுத்தும் விரித்தும், தொகைவிரிப்படுத்தும், மொழிபெயர்த்துமாக்கல். அவற்றுள், இஃதெவ்வாறுக்கப்பட்டதோவெனின், தொகுத்தாக்கப்பட்டது. நுதலிய பொருளென்பது, எடுத்துக்கொண்டபொருளின்னதென்றல். இஃது எடுத் துக்கொண்டபொருள் யாதோவெனின், பாட்டியன்மரபு. கேட்போரென் பது, நூலாய்வார் - இப்பாட்டியலாய்ந்தோர்யாரோவெனின், சிங்காவண்பு கழ்செறிபொழிற்றிருமலைப், பங்கயமலர்த்தாட்பண்டிதரொன்னு முனிவராய் ந்தாரொன்றுணர்க. பயனென்பது, இன்னபயக்குமென்றல். இந்நூலேதவெ ன்னபயக்குமோவெனின், அறம், பொருள், இன்பம், வீடென்னுநான்கினை யும்பயக்கும். காலமென்பது, இன்னார்காலத்திந்நூல்செய்த தென்றல். இந் நூல்யார்காலத்துச்செய்ததோவெனின்,குருத்தவாமணிமுடிக் கொற்றவர்கோ மான்,திருத்தகுமணிமுடித் திரிபுவனதேவனென்னும்அரசன்காலத்திற்செய்த தென்றுணர்க. களனென்பது நூல்கேட்பித்ததின்னாரவைக்களத்தென்றல். இந்நூல்கேட்பித்ததியாரவைக்களத்தெனில், கடவுண்முதலிய நற்சங்கத்தார வைக்களத்தென்றுணர்க. காரணமென்பது நூல்செய்தற்குக்காரணமின்ன தென்றல். இந்நூல்யாதுகாரணமாகச்செய்யப்பட்டதோவெனின், பரந்தபா ட்டியன்மரபுகளிற் கரந்துகிடந்தபொருளையெல்லாம், ஒருங்கேவைப்படுத்தல் காரணமென்றுணர்க. சிறப்புப்பாயிரமென்பது தானுணர்த்தியவெழுந்த அந் நூற்கு, இன்றியமையாதது. இந்நூற்குச்சிறப்புப்பாயிரம் யாதோவெனின். (வெ) "பண்பார்கவிஞர்வியந்தேத்தப்பாட்டியலாம், வெண்பாவந்தாதிவின

மபிஞன், நன்பாருங், கோடாதகீர்த்திக்குணவீரபண்டிதனும்,பீடார்களந்தைப்பிரான்'' என்றுணர்க - இந்நூலுள், இவ்வாதியியலென்னபெயர்த்தோவெனின், முதன்மொழியிலக்கண முணர்த்தினமையின், முதன்மொழியியலென்னும்பெயர்த்து. அற்றேல், எடுத்தசூத்திரந்தொடுத்தபொருள் யாதோவெனின், தெய்வவணக்கமும்,அதிகாரமுமுணர்த்துதனுதலிற்று. (இ-ள்) மதிகொண்ட - தொழுது. எனத்தெய்வவணக்கங்கூறப்பட்டது. பாட்டியலைக்கட்டுரைப்பன்— தொகுத்து. என அதிகாரங்கூறப்பட்டது. நுதிகொண்டபல்கதிர்வேலுண்கண்ணாய், என்பது, மகடூஉமுன்னிலை. இந்நூலுள்சிலசெய்யுளில் மகடூஉமுன்னிலைவரும். (க)

பாயிர முற்றிற்று.

தொகுத்துரைத்த மங்கலஞ் சொல்லெழுத்துத் தானம்
வகுத்தபாலுண்டிவருணம், பகுத்தநாள்
தப்பாக்கதிகணமென்றீரைந்தின்றன்மையினைச்
செப்புவதாமுன்மொழியின்சீர்

(என்னெனின்)உரியவோத்தினு ளொன்றும்பொருளிவையெனப்பெயரும்,முறையும், தொகையுமுணர்த்து-ற்று(இ-ள்)மங்கலமுதலாகக் கணமீறாகக்கிடந்தபத்தினையுஞ், சொல்வதுமுதன்மொழியின்றன்மை. (எ-று) இப்பத்தினையுந் தத்தமிலக்கணமுறைக்குஞ் சூத்திரத்துள்ளேகாட்டுதும். (உ)

(மங்கலப்பொருத்தம்.)

சீரொழுத்துப் பொன்பூ திருமணிநீர்திங்கள்சொற்
கார்பரிதியானை கடலுலகம், தேர்மலைமா
கங்கைநிலம்பிறவுங்காண்டகையமுன்மொழிக்கு
மங்கலமாஞ்சொல்லின்வகை

(எ - ன்) நிறுத்தமுறையே முற்கூறியபத்தனுள் அடுத்தமங்கலமாராய்கின்றது (இ-ள்) சீர்முதலாக நிலமீறாகவெண்ணப்பட்டபத்தொன்பதும் பிறவும் முதன்மொழியிடத்தே நிற்றற்குரியமங்கலச்சொல்லினதுகூறுபாடாம்.(எ-று) பரியாயநாமம்வரினுமிழுக்காது. (ந)

(சொற்பொருத்தம்.)

வகையுளிசேர்தல்வனப்பின்றாய்நிற்றல்
தொகையார் பொருள்பலவாத்தோன்றல், தகையில்
பொருளின்மையீறு திரிதலேபோல்வ
தருமுதற்சீர்ச்சொற்காகுந்தப்பு

(எ-ன்) முன்மொழிக்காகாதசொல் லின்னதென்றியம்புகின்றது. (இ-ள்) முதலெடுத்துக்கொண்ட மூவசைச்சீரியவாகியசொற்கண்மங்கலத்தவாயினும் வகையுளிசேர்ந்தனவும், சிறப்பில்சொல்லும், பலபொருட்கேற்றசொல்லும், பொருளில்சொல்லும், தோன்றல், திரிதல், கெடுதலென்னும் விகாரவிறுதிச்சொல்லும், முன்வைக்கப்படா (எ-று) எனவே அல்லனவாவையுஞ்சொல்லாற்பாலனவென்றுணர்க. (ச)

(எழுத்துப்பொருத்தம்.)

தப்பாதமூன்றைந்தேழொன்பானறவறிலவென்
றெப்பாமுதற்சீர்க்குறைசெய்வர், செப்புங்கால்
தண்டாதநான்காறெட்டாகாதவிர்கென்று
கொண்டாரெழுத்தின்குறி

(எ-ன்.) முன்மொழி எழுத்திலக்கணமுணர் - ற்று. (இ-ள்.) ஒற்றுப்பட மூன்றும், ஐந்தும், ஏழும், ஒன்பதுமாகியவெழுத்தான் முதன்மொழிக்குவருவதுநன்று. நான்கும், ஆறும், எட்டுமாகியவெழுத்தின் முதன்மொழிக்குவருவதுதீது. (எ-று)இரண்டெழுத்தாராயாது விட்டதெற்றுக்கெனின் "முன்மொழியாகலான் மூவசைச்சீரல்லன நன்மைசாறெய்வநவிலாமை." என்னுமிதனுன்மறுக்கப்பட்டது. ஒற்றுப்படவென்பதெற்றுற்போந்ததெனின், ஒற்றெழிந் தொன்பதெழுத்தான்வருவதொரு மூவசைச்சீரின்மையினென்க. ஒற்றைப்படவருவனவியனிலை, இரட்டைப்படவருவனசமனிலை. (௫)

(தானப்பொருத்தம்.)

குறிலைந்துந்தந்நெடில்கொண்டிஉஐஔசேர்ந்
தறிபாலனுதியாவைந்தும், இறைவன்பேர்
முன்னெழுத்துப்பாலனில்வைத்தெண்ணிமூப்பேமரணம்
என்னுமிவைதீதென்றேயெண்

(எ-ன்) ஐவகைத்தானமு மெய்வகையாகவிரிக்கின்றது. (இ-ள்) குற்றெழுத்தைந்தோடுந் தமக்கொத்தநெடிலைச்சேர்த்து, இஉக்கள் நின்றதானத்து முறையே ஐகார ஔகாரங்களைச்சேர்த்தால், உயிரும், உயிர்மெய்யுமென்று சொல்லப்பட்டதொகையெல்லாம் ஐந்துகூறுயடங்கும், இவற்றைப்பட்டுடைத்தலைமகன்இயற்பெயரின் முதலெழுத்தின் கூற்றைத்தொடங்கிப், பாலன், குமரன், இராசன், மூப்பு, மரணமெனவருவித்தால்,அவற்றுள், மூப்பும்,மரணமுமாகா ; அல்லனமுதற்சீரின்முதலெழுத்தாய்வருவனநன்கு.(எ-று)

(பாற்பொருத்தம்.)

எண்ணுங்குறிலாணியைந்தநெடிலெல்லாம்
பெண்ணாகுமொற்றாய்தம்பேடாகும், பெண்ணினோ
டாண்புணர்ச்சிக்கவ்வவ்வெழுத்தேமயங்கினுமாம்
மாண்பில்பேடென்றார்மதித்து

(எ-ன்) பாலிலக்கணமுணர்த்துகின்றது. (இ-ள்) குற்றெழுத்தெல்லாமாண்பாலெழுத்தாம். நெட்டெழுத்தெல்லாம், பெண்பாலெழுத்தாம். ஒற்றெழுத்தும், ஆய்தவெழுத்தும் அலியெழுத்தாம். ஆண்பாலைப்புகழுமிடத்து ஆணெழுத்துச்சிறப்புடைத்து. பெண்பாலைப்புகழுமிடத்துப் பெண்ணெழுத்துச்சிறப்புடைத்து. மயங்கிவந்தவெனினும் வரையப்படா. அலியெழுத்து முன்னிற்றுந்தகைமையவல்ல (எ-று) முதன்மொழியென்பததிகாரத்தாற்கொள்க. (எ)

(உணாப்பொருத்தம்.)

மதித்தகசதநப மவ்வோடுவவ்வும்
உதித்தவைமந்நாற்குற்றுயிரும், துதிக்கமுமிகவ

ஞதிமொழிக்குந் தசாங்கத்தயலுக்கும்
தீதிலவேயென்றார்தெரிந்து

(எ-ன்) உண்டியிரண்டுமுணர்த்திய வெழுத்தாலவற்றுட் கொண்டவமுதெ ழுத்துக்கூறுகின்றது. (இ-ள்) கசதநபமவவ்வென்னும் ஒற்றுக்களேழும், அ இ உ எ என்னுநான்குகுற்றுயிரும், அமுதவெழுத்தாம். அவைமொழிமுதலும், தசாங்கத்தயலும், வந்துவழங்குமரபினவாம். (எ-று.; (அ)

தெரிந்தயரலமேற்சேர்ந்தவாவோவும்
புரிந்தவற்றொற்றாய்தப்புள்ளி, விரிந்த
அளவொடுகான்மாத்திரையுமாமென்றறிந்தோர்
உளவென்றார்நஞ்செனறொழி

(எ-ன்) எஞ்சிநின்றநஞ்செழுத்துநவில்கின்றது. (இ-ள்) கூறியயரலக்கள் மேலேறிய ஆகார ஓகாரமும், யரலவென்னுமொற்றும், ஆய்தப்புள்ளியும், ஒற்றுயிரொன்னும் அளபெடையிரண்டும், மகரக்குறுக்கமும், ஆய்தக்குறுக்கமும், ஆகியபதினைன்கும் நஞ்செழுத்தாம். அவை ஆதிமொழிக்குந் தசாங்கத்தயலுக் குமாகா. (எ-று) முதற்சீராகிய மங்கலச்சொல்லின்கண் நஞ்செழுத்துவந்த னவாலோவெனின். "நஞ்சுமமுதமா மங்கலம்புகினே" என்பவாகலின், மூவ சைச்சீருள்மங்கலச் சொல்லொழியக்கொள்க. நஞ்சினும்முதினுநாட்டப்படா வாகி யெஞ்சிநின்ற உயிரும் உயிர்மெய்யும், மெய்யும் எப்பாற்பட்டவெனின் "அமுதெழுத்தென்றவாதியுயிர்நான்கொடும், புணர்ந்தமெய்யை யுணர்ந்தமு தென்ப."மெய்யாமமுதின் மேவியவுயிரும்பொய் தீர்புலவர்பொருந்தினவெ ன்ப" "நஞ்சாமொற்றொடு நடந்தவுயிர்களும் வஞ்சமில்புலவர்மறுத்திலரெ ன்ப" இருவகையுண்டியென்றெடுத்தனவல்ல, தாமேநிற்பினுந்தோமிலவென்ப என்பன இந்திரகாளி. (கூ)

(வருணப்பொருத்தம்.)

ஒழியாவுயிரனைத்துமொற்றுமுதலாறும்
அழியாமறையோர்க்காமென்பர், மொழியும்
அடைவேயோராறுமரசர்க்காமென்பர்
படையாதசாதிகளின்பண்பு.

(எ-ன்) வருணநான்கனுள்மறையோர்சாதியும், அரசர்சாதியுமறைகின்றது. (இ-ள்) உயிர்பன்னிரண்டு மொற்றுமுதலாறும், பயிலுந்தன்மைப்பார்ப்பன ச்சாதி. அல்லாமெய்யினடையுவேயாறு, மல்லார்புயத்துமன்னர்சாதி(எ-று)

பண்பார்வணிகர்க்காம் பாங்கிலவறனக்கள்
மண்பாவுஞ்சூத்திரர்க்காமற்றையவை, நண்பால்
அரனரிசேய்மால்கதிர்கூற்றாய்மழைபொன்மெய்க்குப்
பிரமன்படைப்புயிர்க்குப்பேசு

(எ-ன்) அல்லாவருணமிரண்டுமுணர்த்திச் சொல்லாப்படைப்புஞ்சொல்லு கின்றது. (இ-ள்)லவறன என்னுநான்குமெய்யும் வணிகர்வருணமாம். ழளவெ னுமிரண்டுஞ் சூத்திரவருணமாம். அரன். அரி, செவ்வாய், புதன். இரவி, மதி, இடமன். வருணன். விடாமும். என்னுமொன்பதும்[illegible] முறை

யேயிரண்டிரண்டாகப் பதினெட்டுமெய்யும்படைத்தார், பன்னிருயிரும்பிரமன்படைத்தான் (எ-று) இச்சூத்திரத்துட் கதிரோனப்பொதுப்படக் கூறியதுகடிரிரண்டுங்கோடற்கு. படைப்பையதிகாரத்தாற்றழீஇக் கொள்ளாதெடுத்தோதித் தொடுத்தமைபடைப்புவேண்டாமை முதனூறமுவிற்றுதலானும், பிறர்நூன்முடிந்ததுதானுடன்படுதலானுமென்க. அன்றியும்இவ்வெழுத்துகட்குத்தெய்வம், அவ்வவர்களெனக்கொள்ளப்பட்டதெனினுமமையும். (௰௧)

(நாட்பொருத்தம்)

பேசுமுயிரட்டைவேநான்காரல்பின்னைந்து
மாசில்லாப்பூராடமற்றொருமூன்—றுசிலாப்
பேருத்திராடமாமென்றுபெரிதுணர்ந்தோர்
பாரித்தார்நாளின்பரிசு.

(எ-ன்) ஏறியமுதலெழுத்திற்கு நாளிசைப்புழி யாதிருயிர்க்கு, நாளறிவிக்கின்றது. (இ-ள்) அ ஆ இ ஈ என்னு நான்குயிருங்கார்த்திகை, உ ஊ எ ஏ ஐ என்னுமைந்தும்பூராடம், ஒ ஓ ஔ வென்னுமூன்றும் உத்திராடமாம். (எ-று)()

பரிசுடையககவ்வரியினன்கிரண்டுமூன்றுந்
தெரிவுடையமூன்றடைவேசெப்பிற்—பிரிவுடைய
ஓணமேயாதிரையேயொண்புநர்பூசம்பூசம்
பேணிபுணைத்தார்பிரித்து

(எ-ன்) கவ்வருக்கநாளுரைக்கின்றது. (இ-ள்) க கா கி கீ என்னும் நான்குந்திருவோணம், குகூவென்னுமிரண்டுந்திருவாதிரை, கெகேகை யென்னுமூன்றும்புநர்பூசம், கொகோகௌ என்னுமூன்றும் பூசமாம். (எ-று) (௰௩)

பிறிந்தசகரத்துநான்கைந்துபின்மூன்
றறிந்தகலமுதன்மூன்றாகும்—செறிந்த
ஞகரத்தொருமூன்றுநன்குணர்ந்தோராய்ந்த
புகர்திரவிட்டமாம்போற்று

(எ-ன்) சகரஞகரவருக்கங்களுக்கு நாளுணர்த்துகின்றது. (இ-ள்) சசாசிசீ என்னுநான்கும் இரேவதி, சுசூசெசேசை என்னுமைந்தும் அச்சுவினி,சொசோசௌ வென்னுமூன்றும்பரணி, ஞஞாஞெ யென்னுமூன்றும் அவிட்டமாம். (எ-று) (௰௪)

போற்றுந்தகரமிரண்டேழ்மூன்றும்பொய்தீர்ந்தோர்
சாற்றுவர்சோதிமுறஞ்சதயம்—வேற்றனுடம்
கேட்டைபூரட்டாதிகேணகரத்தோராறும்
வாட்டமிலாமும்மூன்றும்வந்து

(எ-ன்) தகரநகரவருக்கங்களுக்கு நாளுரைக்கின்றது. (இ-ள்) ததாவென்னுமிரண்டும்சோதி, திதீதுதூதெதேதை யென்னுமேழும்விசாகம், தொதோதௌ வென்னுமூன்றுஞ்சதயம், நநாநிநீநுநூ வென்னுமாறும் அனுடம், நெநேநை யென்னு மூன்றுங்கேட்டை, நொநோநௌவென்னு மூன்றும்பூரட்டாதியாம். (எ-று) (௰௫)

வந்தபகரத்துநான்கிரண்டாறுத்திரந்தொட்
டந்தமிலர்மூன்றுகுமவ்வடைவே—வந்ததற்பின்
ஆறுமகமூன்றுடன்மூன்றாயிலியம்பூரமா
மாறின்மகரத்தின்மாட்டு

(எ-ன்) பகரவருக்கத்திற்கும், மகரவருக்கத்திற்கும், நாளுரைக்கின்றது, (இ-ள்) பபாபிபீயென்னு நான்கும்உத்திரம், புபூவென்னு மிரண்டும் அத்தம் பெபேபைபொபோபௌவென்னு மாறுஞ்சித்திரை, மமாமிமீமுமூவென்னுமா றும் மகம், மெமேமையென்னுமூன்றும் ஆயிலியம், மொமோமௌவென்னு மூன்றும் பூரமாம் (எ-று.) (௰௬)

மாட்டும்யகரத்துள்பாவுத்திரட்டாதி
ஈட்டியயுகாரயோகாரங்கள்—காட்டிய
மூலம்வகரத்தொருநான்குரோகணிமான்
தோலாதுநான்கெனவேசொல்

(எ-ன்) யகரவகரவருக்கங்களுக்கு நாளுரைக்கின்றது. (இ-ள்) யாவொன் றும் உத்திரட்டாதி, யூயோவென்னுமிரண்டும் மூலம், வவாவிவீயென்னுநான் கும் உரோகணி, வெவேவைவௌவென்னு நான்குமிருகசிரமாம்.(எ-று) (௰௭)

சொல்லியநாண்மூவொன்பதாகத்துணிந்தொன்று
புல்லியமூன்றைந்தேழ்பொருந்தாவாம்,—அல்லனவற்
றட்டமிராசிவயினாசியமிவையும்
விட்டொழித்துநன்றெனவேவேண்டு

(எ-ன்) பாட்டுடைத்தலைவன் பெயர்முதலெழுத்தினுக்கும், மங்கலமொழி முதலெழுத்தினுக்கும் பொருந்துமாறுணர்த்துகின்றது. (இ-ள்) சொல்லிய நாளிருபத்தேழையும், ஒன்பதொன்பதாக மூன்றுகூறாக்கிப் பாட்டுடைத்தலை மகனியற்பெயரின் முதலெழுத்தினைத்தொடங்கிக்கூறுகளையெண்ண ஒன்று மூன்று ஐந்து ஏழ்வரிற்பொருந்தா அல்லாதநாட்களுட்பாட்டுடைத்தலைவன் பெயர்முதலெழுத்தினிராசிதொடங்கி எட்டாமிராசிநாட்களும்பொருந்தா.வயி னாசியமாகிய எண்பத்தெட்டாங்கால் நின்றநாளும்பொருந்தா.(எ-று) புல்லி யவென்று மிகுத்துச்சொல்லியவதனால், மூன்றுமொன்பதின் மூன்றுமைந்து மேழும்பொருந்துமெனக்கொள்க. "மூன்றுமொன்பதின் மூன்றைந்தேழும், பொருந்துமென்று புகலுவர்புலவர்" என்பதுஇந்திரகாளி. (௰௮)

(கதிப்பொருத்தம்)

வேண்டுங்குறில்வன்மையீரொழித்தால்விண்ணோர்க்காம்
ஆண்டநெடின்முதனான்கதயொழித். திண்டிய
மென்மையாக்கட்கிவையிரண்டுமெய்க்கதிக்கு
நன்மையாமுன்மொழிக்குநாட்டு

(எ-ன்)ஓதியநாற்கதி யுணர்த்தியவெழுந்தவற் றுதியிரண்டுமறிவிக்கின்றது; (இ-ள்) அஇஉஎவென்னு நான்குகுற்றுயிரும் கசடதபவென்னு மைந்தொற்று.

(சித்திரகவி.)

யாப்புடையமாலைமாற்றுதியாவேனையவும்
வாய்ப்புடையசொல்லின்வகுத்தமைத்து,நீப்பிலா
வண்ணமுந்தொன்னூன்மரபுவழுவாமற்
பன்னுவதுசித்திரத்தின்பா.

(எ-ன்) சித்திரகவியித்தின்மைத்தென்கின்றது. (இ-ள்.) மாலைமாற்று, சக்கரம், சுழிகுளம், ஏகபாதம், எழுகூற்றிருக்கை, காதைகரப்பு, கரந்துறைப்பாட்டு, தூசங்கொளல், வாவனாற்றி, கூடசதுக்கம், கோமூத்திரி, ஒரெழுத்துப்பா, வல்லினப்பாட்டு, மெல்லினப்பாட்டு, இடையினப்பாட்டு, சித்திரக்கா, விசித்திரக்கா, வித்தாரக்கா, விகற்பநடை, வினாவுத்தரம், சருப்பதோபத்திரம், எழுத்துவருத்தனை, நாகபந்தம், முரசபந்தம், நிரோட்டம், சித்து, ஒருபொருட்பாட்டு, பலபொருட்பாட்டு, மாத்திரைப்பெருக்கம், மாத்திரைச்சுருக்கம், எழுத்துப்பெருக்கம், எழுத்துச்சுருக்கம், இன்னவைபிறவுமாகிய பலவிகற்பாற்செய்யப்பட்டோசைகெடாமல், எழுத்துக்குற்றம், சொற்குற்றம், பொருட்குற்றம்,யாப்புக்குற்றம், அலங்காரக்குற்றம், என்னுங்குற்றங்கள் படாமல், பாடப்படுங்கவி சித்திரகவியாம். (எ-று.) இக்கவிபாடுவோனுஞ்சித்திரகவியாம். இவையெல்லாம் யாப்பதிகாரத்திற்கண்டுகொள்க. (௪)

(வித்தாரகவி.)

பாங்கார்தொடர்நிலைப்பாபல்பாதஞ்சேர்தனிப்பா
ஈங்ககலப்பாக்களிரண்டாகும், ஆங்குத்
தொடர்நிலைப்பாதன்விகற்பஞ்சூழ்வளையாய்சொல்லிற்
கடையிலவேயென்றுரைத்தார்கண்டு.

(எ-ன்.) அகலக்கவிபுகல்கின்றது. (இ-ள்.) பலசெய்யுட்கள்கூடிவந்ததொடர்நிலைச்செய்யுளும்,அடிபலவாய்நடக்குந்தனிப்பாச் செய்யுளுமென்னும் இருதிறமும் அகலக்கவியாம். அவற்றுட்டொடர்நிலைச்செய்யுளை விகற்பிக்குமிடத்து ஏற்றபொருளெடுத்துப்பாடுவோரளவல்லது இன்ன அளவென்றுரைப்பதரிது. (எ-று.) அகலக்கவிபாடுவோனும் அகலக்கவியாம். (௫)

(பிள்ளைக்கவி.)

கண்டுரைக்கிற்பிள்ளைக்கவிதெய்வங்காக்கவெனக்
கொண்டுரைக்குந்தேவர்கொலையகற்றி, ஒண்டொடியாய்
சுற்றத்தளவாவகுப்பொடுதொல்விருத்தம்
முற்றுவித்தனூலின்முறை.

(எ-ன்.) பலவிகற்பங்களிற் சிலவெடுத்துரைப்பான்வேண்டி யவற்றுள், பிள்ளைக்கவிக்கிலக்கணமுணர்த்துகின்றது. (இ - ள்) பிள்ளைக்கவிபாடுமிடத்து வேண்டுங்கடவுளைச்சுட்டிப் பாட்டுடைத்தலைவனை அவன்சுற்றத்தொகையோடு தேவர்கொலையகற்றிக்காக்கவென, வகுப்பாலும், ஆசிரியவிருத்தத்தாலும் பாடுக (எ-று.) கண்டுரைக்கினென்றுமிகுத்துச்சொல்லியவதனால், காப்பு

க்கவிகளை மூன்றைந்தேழொன்பதுபன்னொன்றாகத்தொடுத்துக் காப்புமாலை யென்று பாடுகையுமுளதென்றுணர்க. (௬)

முறைதருமூன்றாதிமூவேழிரூந்திங்கள்
அறைகநிலம்பத்துமாண்டைந்தேழ், இறைவனையாக்
கந்தஞ்சிறுபறையேயாதியாமூன்றொழித்துத்
தந்தநிலமோரேழுஞ்சாற்று.

(எ-ன்.) இதுவுமது (இ-ள்.) பிள்ளைப்பிரபந்தம் மூன்றுமாதமுதலிருபத்தோராம் மாதம்வரை ஒற்றித்தமாதமாகிய பத்துமாதங்களினுங் கேட்பிக்கப் படும். அன்றியும், ஐந்தாமாண்டினும், ஏழாமாண்டினுமிக்கவிகேட்பிக்கினு மிழுக்காது. பெண்பிள்ளைக்கவிபாடுமிடத்துச், சிறுபறைகொட்டலும், சிறறில்சிதைத்தலும், சிறுதேருருட்டலுமாகிய மூன்றுநிலமுமொழிதது, ஒழிந்தவேழுநிலமும் பாடப்படும். (எ-று.) இவ்வேழுடன், கழங்கு, அம்மனை, ஊசலென்னுமூன்றையுங்கூட்டிப் பத்தாகப்பாடுவாருமுளர். (எ)

சாற்றரியகாப்புத்தால்செங்கீரைசப்பாணி
மாற்றரியமுத்தமேவாரானை, போற்றரிய
அம்புலியேயாய்ந்தசிறுபறையேசிற்றிலே
பம்புசிறுதேரோடும்பத்து.

(எ-ன்.) பிள்ளைக்கவிக்கேற்ற பத்துநிலமுமுரைக்கின்றது. (இ-ள்.) காப்பும், தாலும், செங்கீரையும், சப்பாணியும், முத்தமும், வாரானையும், அம்புலியும், சிறுபறைமுழக்கலும், சிற்றில்சிதைத்தலும், சிறுதேருருட்டலும், எனமுறையானேபாடுக. (எ-று.) நிலங்கள்பத்தும், தம்மிலொக்கக்கொண்டுபாடுமிடத்து ஒற்றிக்கப்பாடுவது சிறப்புடைத்து. இரட்டித்துப்பாடினுமோசைபெயர்த்துப்பாடுக. (அ)

(பல்சந்தமாலை, அந்தாதி.)

பத்தாதிநூறந்தம்பல்சந்தமாலையாம்
ஒத்தாயவெண்பாவொருநூறு, ஒத்தசீர்
அந்தாதியாகுங்கலித்துறையுமவ்வகையே
வந்தாலதன்பேரவை.

(எ-ன்.) பல்சந்தமாலைகளும், அந்தாதியுமுணர்த்துகின்றது. (இ-ள்.) பத்துமுதலாக நூறீறாகநின்றவிகற்பத்தது பல்சந்தமாலை விகற்பமாம். நேரிசைவெண்பா நூறந்தாதியாய்வந்தால் வெண்பாவந்தாதியென்றும், கட்டளைக்கலித்துறை நூறந்தாதியாய்வந்தால், கலித்துறையந்தாதியென்றும் பெயர்பெறும். (எ-று.) பல்சந்தமாலை வகுப்பும், ஆசிரியமுமாயந்தாதித்துவரும். (௯)

(கலம்பகம்.)

வைக்கும்புயந்தவம்வண்டம்மனைபாண்மதங்கு
கைக்கிளைசித்தூசல்களிமடக்கூர், மிக்கமறம்

காலந்தழையிரங்கல்சம்பிரதங்கார்தூது
கோலுங்கலம்பகத்தின்கூறு.

(எ-ன்.) கலம்பகவிலக்கணங்கூறுகின்றது. (இ-ள்.) புயம், தவம், வண்டு, அம்மனை, பாண், மதங்கு, கைக்கிளை, சித்து, ஊசல், களி, மடக்கு, குடி, மறம், காலம், தழை, இரங்கல், சம்பிரதம், மேகவிடுதூது என்னுமிப்பதினெட்டும் கலம்பகத்தினுறுப்புப்பொருளாம். (எ-று.) மிக்கமறமென்று சிறப்பித்தவதனால், இப்பதினெட்டும், கலம்பகத்துக்கு நிலைபெற்றவுறுப்பு. ஒழிந்தன இன்னவகையான பொருளால்வருபவென்னு நிலைபேறுடையவல்லவென்று கொள்க. ஊறொன்றதுகுடிமை. இரங்கலென்றதுகாமமிக்ககழிபடர்கிளவி (௰)

கூறுமொருபோகுவெண்பாகலித்துறைகள்
மாறின்முதலுறுப்பாம்பின்விருத்தம், வேறகவல்
வஞ்சித்துறைவிருத்தம்வான்றுறைவெண்பாமருட்பா
எஞ்சாக்கலியினங்கொண்டீட்டு.

(எ-ன்.) கலம்பகப்பாவேறுபாடுணர்த்துகின்றது. (இ-ள்.) முதலொருபோகுவந்து, அதன்பின்னொருவெண்பாவந்து, அதன்பின்னொருகலித்துறைவந்தால் அவைமுதலுறுப்பாம். அதன்பின் ஆசிரியவிருத்தம், ஆசிரியப்பா, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம். வெண்டுறை, வெண்பா, மருட்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தமென்றுசொல்லப்படும் பாக்களியைந்தபடி கொண்டியற்றுக. பிறபாக்கள்வரினுமிழுக்காது. (௰௧)

ஈசர்க்குநூறிழிபைந்தையர்க்கிகலரசர்க்
காசற்றதொண்ணூறமச்சருக்காம், ஏசா
எழுபானைம்பான்வணிகர்க்கேனையோர்க்காறைந்
திழிபிற்கலம்பகப்பாட்டீண்டு.

(எ-ன்.) கலம்பகத்திற்கேற்ற சுருக்கமியம்புகின்றது. (இ-ள்.) தேவர்க்கு நூறும், முனிவர்க்குத்தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத்தொண்ணூறும், அமச்சருக்கெழுபதும், வணிகர்க்கைம்பதும், ஏனையோர்க்கு முப்பதுமாகப்பாடுவதேயிழிபு. (எ-று.) ஆசற்றவென்றுசிறப்பித்தவதனால், குறுநிலமன்னரை அரசரைப்போலவும், முனிவரைப்புத்தேளிரைப்போலவும் பாடினுமிழுக்காது. கலம்பகமும் அந்தாதியாகவேபாடவேண்டுமென்றறிக. (௰௨)

ஒலியந்தாதி, மும்மணிக்கோவை.

ஈண்டியமுப்பதாயிரொண்கலைவண்ணம்
மூண்டதொலியந்தாதிமுப்பதாம், ஆண்டகவல்
முன்முறையேவெண்பாகலித்துறையவந்தாதி
மும்மணிக்கோவைக்குமுதல்.

(எ - ன்.) ஒலியந்தாதியும், மும்மணிக்கோவையுமுணர்த்துகின்றது. (இ-ள்.) ஓரடிக்குப்பதினறுகலைதொடுத்த பல்சந்தவகுப்புக்கள் அந்தாதியாகமுப்பது

கூடியது ஒலியந்தாதியாம். நேரிசை ஆசிரியப்பாவும், நேரிசைவெண்பாவும், கட்டளைக்கலித்துறையும், முறையே அந்தாதியாகமுப்பது கூடியதுமும்மணிக்கோவையாம். (எ-று.) ஈண்டியவென்றுமிகுத்துச்சொல்லியவதனால், ஒலியந்தாதிசிறுபான்மை எட்டுக்கலையால் வரப்பெறுவனவும்; மும்மணிக்கோவை சிறுபான்மையிலைமண்டில ஆசிரியப்பாப் பெற்றுவருவனவு முளவெனக்கொள்க. ஒலியந்தாதியை, ஒலியலந்தாதியென்பாருமுளர். (௰௩)

(ஊர்நேரிசைவெண்பா, ஊரின்னிசைவெண்பா.)

முதல்வனூரின்பேரான்மொழிவனவெண்பா
அதனைத்தொண்ணூறெழுபானைம்பான், மதர்விழியாய்
இன்னிசைவெண்பாவிற்குமொக்குமியற்பெயர்
அன்னவற்றூர்கட்டுரைத்தாராய்ந்து.

(எ-ன்.) ஊர்நேரிசைவெண்பாவும், ஊரின்னிசைவெண்பாவும், அவற்றின்றொகையு முணர்க்கின்றது. (இ-ள்.) பாட்டுடைத்தலைவன் ஊர்ப்பெயரொடுத்து நேரிசை வெண்பாவாற் சிறப்பித்துத் தொண்ணூறு, எழுபது, ஐம்பது, என்னுந் தொகையாற் பாடுவது ஊர்நேரிசை வெண்பா வென்றும், இவ்வாறு இன்னிசைவெண்பாவாற்பாடுவது, ஊரின்னிசைவெண்பாவென்றும்பெயர்பெறும். (எ-று.) (௰௪)

(கோவை, கைக்கிளை.)

ஆய்ந்தகலித்துறைதானூறகப்பொருண்மேல்
வாய்ந்தநற்கோவையாமற்றுரைப்பின், ஏய்ந்த
ஒருதலைக்காமமுரைப்பவையையந்தாய்
வருவிருத்தங்கைக்கிளையாமன்.

(எ-ன்.) கோவையுங் கைக்கிளையுங் கூறுகின்றது. (இ-ள்.) கட்டளைக்கலித்துறை நானூறு அகப்பொருண்மேல்வருவன கோவையென்பதாம் – ஒருதலைக்காமப்பொருள்பெற்றுவிருத்தம் இருபத்தைந்தாய் வருவனகைக்கிளையாம். (எ-று.) (௰௫)

மன்னியவெண்பாகலித்துறைமன்னர்பா
முன்னியமுப்பான்மும்மணிமாலை, மன்விருத்தம்
நாட்டியநாற்பதுநான்மணிமாலையாம்
ஈட்டியவந்தாதியாயேய்ந்து.

(எ-ன்.) மும்மணிமாலையும், நான்மணிமாலையுமுணர்க்கின்றது. (இ-ள்.) வெண்பாவும், கலித்துறையும், ஆசிரியமும், அந்தாதியாமுப்பதுசெய்யுள்வருமாயின் மும்மணிமாலையென்றும், மேற்கூறியபாக்களுடன், ஆசிரியவிருத்தஞ்சேர்ந்து அந்தாதியாய், நாற்பதுசெய்யுள்வருமாயின், நான்மணிமாலையென்றும்பெயர்பெறும். எ-று. (௰௬)

(இருபாவிருபஃது, இரட்டைமணிமாலை, இணைமணிமாலை.)

ஏய்ந்தவிருபாவிருபதுவெண்பாவகவல்
ஆய்ந்தவிரட்டைமணியிருபான், ஏய்ந்தசீர்
வெண்பாகலித்துறையாமேவியநான்கானூ
றென்பாவிணைமணியாமோர்.

(எ-ன்.) இருபா இருபஃதும், இரட்டைமணிமாலையும், இணைமணிமாலையுமியம்புகின்றது. (இ-ள்.) வெண்பாவும், ஆசிரியப்பாவும், முறையே அந்தாதியாய்வந்து இருபதுசெய்யுளான் முடிவது இருபாவிருபஃதென்றும், வெண்பாவும், கலித்துறையும், முறையே அந்தாதியாய்வந்து இருபதுசெய்யுளான்முடிவதுவெண்பாக் கலித்துறை யிரட்டைமணிமாலை யென்றும், வெண்பாவும் ஆசிரியப்பாவும், முறையேயந்தாதியாய்நூறு செய்யுளான்முடிவது வெண்பா அகவலிணைமணிமாலை யென்றும், வெண்பாவும்கலித்துறையும் கூடி முன்போன் முடிவது வெண்பாக் கலித்துறை யிணைமணிமாலை யென்றும் பெயர் பெறும். (எ-று.) (௰எ)

(ஒருபாவொருபஃது. பன்மணிமாலை.)

ஓர்ந்தகவல்வெண்பாகலித்துறையென்றொன்றினால்
ஆர்ந்தவொருபாவொருபதம்மானை, கூர்ந்தொருபோ
கூசலொழித்தாற்கலம்பகப்பா வொண்மாலை
பேசியபன்மணியாம்பின்பு.

(எ-ன்.) ஒருபாவொருபஃதும்,பன்மணிமாலையுமுணர்த்துகின்றது. (இ-ள்) ஆசிரியப்பாவேனும், வெண்பாவேனும், கலித்துறையேனும், அந்தாதியாய்ப் பத்துச்செய்யுள்வருவனவொருபா வொருபஃதாம். கலம்பகவுறுப்புகளில், அம்மானையும், ஒருபோகும், ஊசலும் ஒழித்து மற்றையவுறுப்புகளாற்பாடுவது பன்மணிமாலையென்று பெயர்பெறும். எ-று. (௰அ)

(தசாங்கம்.)

புல்லுமலையாறுநாடூர்புனைதார்மா
கொல்லுங்களிறுகொடிமுரசம், வல்லகோல்
என்றிவைநஞ்செழுத்தோடேலாவகையுணாப்ப
நின்றதசாங்கமெனநேர்.

(எ-று.) சின்னப்பூவுணர்த்துவான்றொடங்கி, அதற்குநிலமாகிய தசாங்கமுணர்த்துகின்றது. (இ-ள்.) மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, பரி, கரி, கொடி, முரசம், செங்கோல், ஆகியபத்தும், தசாங்கமென்றுசொல்லப்படும். இவைபாடுமிடத்து நஞ்செழுத்துத் தசாங்கத்துக்கு முன்னும்பின்னும்வாராமற் பாடுக. எ-று. (௰க)

சின்னப்பூ, தசாங்கப்பத்து.

நேருந்தசாங்கத்தைநேரிசைவெண்பாவால்
ஈனாம்பதுதொண்ணூறீண்டெழுபான், ஒனாம்பான்

தேர்ந்துரைக்கிற்சின்னப்பூவீரைந்தாற்செப்பினர்
நேர்ந்ததசாங்கநிலை.

(எ-ன்.) சின்னப்பூவும், தசாங்கநிலையுமுரைக்கின்றது. (இ-ள்.) தசாங்கம் பத்தையும்பொருளாகக்கொண்டு, நேரிசைவெண்பா நூறுனும், தொண்ணூறுனும், எழுபதானும், ஐம்பதானும் பாடுவதுசின்னப்பூவாம். முப்பது பாடினுமிழுக்காது. நிலைமைகடம்மிலொப்பக்கொண்டு, பாடப்படுந்தசாங்கம்பத்தினையும், பத்துவெண்பாவாற்பாடுவதுதசாங்கப்பத்தென்றுபெயர்பெறும்-எ-று.

நிலையார்குடைசெங்கோலூர்நாடுநீள்வேல்
கொலையார்களிறுகுதிரை, சிலைவாள்
இவற்றின்மேன்மன்விருத்தமீரைந்தாய்வந்தால்
அவற்றின்பேர்நாட்டலறிவு.

(எ-ன்.) விருத்தவிகற்பமுரைக்கின்றது. (இ-ள்) குடை, செங்கோல், ஊர் நாடு, வேல், கரி, பரி, வில், வாள், இவ்வொன்பதினையும் பொருளாகக்கொண்டு, ஒன்றின்மேற்பத்தாசிரியவிருத்தம்புணர்த்தால், அப்பொருளோடுபெயர்கொடுத்து, குடைவிருத்தம், செங்கோல்விருத்தம், ஊர்விருத்தம், நாட்டுவிருத்தம்,வேல்விருத்தம், யானைவிருத்தம், குதிரைவிருத்தம்,வில்விருத்தம், வாள்விருத்தமென்றுவழங்கப்படும். எ-று. (௨௧)

(ஊர்வெண்பா, அலங்காரபஞ்சகம்.)

அறிந்திடிலூர்வெண்பாவையிரண்டாம்வெள்ளை
செறிந்தகலித்துறைசீர்மன்பா, அறைந்த
கலங்காதமன்விருத்தங்காண்டகையவண்ணம்
அலங்காரபஞ்சகமென்றார்.

(எ-ன்.) ஊர்வெண்பாவும், அலங்காரபஞ்சகமு முரைக்கின்றது. (இ-ள்) ஊரடுத்து நேரிசைவெண்பா பத்துவந்தால் ஊர்வெண்பாவெனவும், நேரிசைவெண்பாவும், கலித்துறையும், ஆசிரியப்பாவும், ஆசிரியவிருத்தமும், வகுப்புமாகிய ஐந்துமுறையேவந்தால் அலங்காரபஞ்சக மெனவும் பெயர் பெறும். (எ-று.) (௨௨)

(ஊசல், நாழிகைவெண்பா.)

ஆங்கவிருத்தத்தாலறைந்தகலித்தாழிசையால்
ஓங்கியசுற்றத்தளவாயூசலாம், போங்கடிகை
தேவர்க்குங்காவலர்க்குந்தேர்ந்துரைக்கவெண்பாவை
மேவியநாலெட்டாகவேய்ந்து.

(எ-ன்.) ஊசலும், நாழிகைவெண்பாவும், உணர்த்துகின்றது. (இ-ள்.) ஆசிரியவிருத்தத்தாலாதல், கலித்தாழிசையாலாதல் சுற்றத்தளவாத்தொகையாகப்பாடுவது ஊசலென்பதாம். நாழிகையளவைக் குறித்துத் தேவருக்கும், அரசருக்கும், நேரிசைவெண்பா வால் முப்பத்திரண்டாகப் பாடுவது நாழி

கைலெண்பா வெனப்படும் (எ-று.) ஊசன்முதற்கவியில் வண்ணமுங் கொள்க. வண்ணமென்பது வகுப்பு. (உ௩)

(அட்டமங்கலம், நவமணிமாலை, தசப்பிராதுற்பவம்.)

வேய்ந்தவிருத்தங்களெட்டட்டமங்கலமாம்
வாய்ந்தனவொன்பான்மணிமாலை, ஆய்ந்தங்
கிசைத்திடுவர்மால்பிறப்பாலீரைந்துவாழ்த்துத்
தசப்பிராதுற்பவமாந்தந்து,

(எ-ன்.) அட்டமங்கலமும், நவமணிமாலையும், தசப்பிராதுற்பவமு முணர்த்துகின்றது. (இ-ள்.) ஆசிரியவிருத்தத்தாற் கவிதோறும், தேவர்கள்காக்கவென எட்டுக்கவியாகப்பாடுவது அட்டமங்கலமாம். மேற்கூறியவாறே ஒன்பதுதகவியாகப்பாடுவது நவமணிமாலையாம். மால்பிறவிப்பேதப் பதின்மருங்காக்கவெனத் தனித்தனி ஆசிரியவிருத்தத்தாற் பத்துக்கவிபாடுவது தசப்பிராதுற்பவமாம். (எ-று.) வாழ்த்தென்பதனை யெங்குமொட்டிகொள்க. (உ௪)

(நயனப்பத்து, பயோதரப்பத்து.)

தந்துறைத்தமன்விருத்தஞ்சார்ந்தகலித்துறைதான்
அந்தமுறுங்கண்முலைமேலையிரண்டாய், வந்தால்
நயனபயோதரப்பத்தாமென்றுநன்னூற்
பயனுணர்ந்தார்முன்புபகர்.

(எ_ன்.) நயனப்பத்தும் பயோதரப்பத்து முணர்த்துகின்றது. (இ-ள்.) ஆசிரியவிருத்தத்தானுதல், கலித்துறையினுனுதல் நயனத்தையும், பயோதரத்தையும் பொருளாகக்கொண்டுதனித்தனிபப்பத்துக்கவிபாடுவது நயனப்பத்தென்றும், பயோதரப்பத்தென்றும் பெயர்பெறும். (எ-று.) (உ௫)

(பெண்கள், பருவம்.)

பகருங்காலைந்தேழ்பதினொன்றுபன்மூன்
றகலாதபத்தொன்பானையைந், திகலாத
முப்பத்தொன்றீரிருபான்பேதைமுதலோர்க்குச்
செப்புவராண்டெல்லைத்திறம்.

(எ-று.) பேதைமுதலாப்புறத்திலக்கண மாகிய ஏழுநிலனு மிவையென்கின்றது. (இ-ள்.) ஐந்துமுதலேழளவும் பேதை. எட்டுமுதல் பதினொன்றளவும் பெதும்பை. பன்னிரண்டுமுதல் பதின்மூன்றளவுமங்கை. பதினான்குமுதல் பத்தொன்பதளவுமடந்தை. இருபதுமுதல் இருபத்தைந்தளவும் அரிவை. இருபத்தாறுமுதல் முப்பத்தொன்றளவும் தெரிவை. முப்பத்திரண்டுமுதல் நாற்பதளவும் பேரிளம்பெண். (எ-று.) பருவமொன்றுக்குவருடம். ௩, ௪, உ, ௬, ௬, ௬, ௯. (உ௬)

(உலா, குழமகன்.)

திறந்தெரிந்தபேதைமுதலெழுவர்செய்கை
மறந்தயரவந்தான்மறுகேன், றறைந்தகலி

வெண்பாவுலாவாங்குழமகன்மேன்மேவிலவ்
வொண்பாக்குழமகனுமுறறு.

(எ-ன்.) உலாவும், குழமகனு மாமாறுணர்த்துகின்றது. (இ-ள்.) பேதைமுதலாேனார் காதல்கூர வீதியிடைப்போந்தான் பாட்டுடைத்தலைவனென்றுகலிவெண்பாவாற்பாடுவது உலாப்புறமாம். மடந்தையர்கையிற்கண்டகுழமகனைப்புகழ்ந்து மேற்கூறியபாவாற்பாடுவது குழமகனாம். (எ-று.) இறந்தெரிந்தவென்றுமிகுத்துச்சொல்லியவதனால் உலாப்புறத்துமுன் குழமகனைப்பாடினுமிழுக்காது. அது தலைவன், நாடும், தாரும், பெயரு முள்ளிட்டுவளந்தோன்றப்பாடுவது. (௨எ)

(வளமடல்)

உற்றவறம்பொருள்வீடெள்ளியுயர்த்தின்பம்
பொற்றொடிகாதற்பொருட்டாகப், பெற்றி
உரைத்தகலிவெண்பாமடலிறைவனெண்பேர்
நிரைத்தவெதுகைநிறுத்து.

(எ-ன்.) வளமடல்கூறுகின்றது. (இ-ள்.) அறம் பொருள் வீட்டையெள்ளி இன்பத்தையேவலியுறுத்திப் பாட்டுடைத்தலைவனியற்பெயருக்குத்தக்கமுழுதுமொரோயெதுகை யாகத் தனிச்சொல்லின்றிக் கலிவெண்பாவாய் மடலூரும் பெற்றிற்றென்று பாடுவதுவளமடலாம். (எ-று.) வளமடலென்பதுஉரையிற்கோடல். (௨அ)

(அங்கமாலை. பாதாதிகேசம். கேசாதிபாதம்.)

நிறுத்தவெளிவிருத்தநீடுறுப்பில்வந்தால்
குறித்தங்கமாலையாக்கொள்க, உறுப்பமைந்த
பாதாதிகேசமுங்கேசாதிபாதமுமா
ஓதுங்கலிவெண்பாவொன்று.

(எ-ன்.) அங்கமாலையும், பாதாதிகேசமும், கேசாதிபாதமும்உணர்த்துகின்றது. இ-ள். உறுப்புக்களை வெளிவிருத்தத்தாற்புகழ்ந்துகோவையாகப்பாடுவது அங்கமாலையாம். அவ்வங்கங்களைக்கலிவெண்பாவாற் புகழ்ந்துபாதாதிகேசமாகப்பாடுவதுபாதாதிகேசமென்றும், கேசாதிபாதமாகப்பாடுவது கேசாதிபாதமென்றும் பெயர்பெறும் எ-று. (௨௯)

(ஆற்றுப்படை.)

ஒன்றுமகவலாலொண்புலவர்யாழ்ப்பாணர்
குன்றுதசீர்ப்பொருநர்கூத்தரோ, என்றிவரை
ஆங்கொருவனாற்றுப்படுத்தபரிசறைந்தாற்
பாங்காயவாற்றுப்படை.

(எ-ன்.) ஆற்றுப்படையிலக்கணமுணர்த்துகின்றது (இ-ள்) ஆசிரியப்பாவாற் புலவனையாயினும், பாணனையாயினும், பொருநனையாயினும், கூத்தனையாயினும், தம்முளொருவனாற்றுப்படுத்தால், புலவராற்றுப்படை, பாணராற்றுப்படை, பொருநராற்றுப்படை, கூத்தராற்றுப்படையென்றுவழங்கப்படும். எ-று. அவைவெண்கலிப்பாவாற்பாடினுமிழுக்காது. (௩௰)

(தானைமாலை, வஞ்சிமாலை, வாகைமாலை.)

படைத்திறஞ்சொல்லிற்பகர்தானைவஞ்சி
எடுத்துமேற்சேறலியம்பின், அடுத்தமைந்த
வெற்றியுரைவாகையாம்வேந்தன்பாவொன்றினல்
உற்றுரைத்துமாலைப்பேரோது.

(எ-ன்.) தானைமாலையும், வஞ்சிமாலையும், வாகைமாலையும் உரைக்கின்றது. (இ-ள்) ஆசிரியப்பாவாற்றானையைப்புகழ்ந்துரைப்பிற்றானைமாலையாம். படைமேலெடுத்துச் சேறலைப்பாடின் வஞ்சிமாலையாம். வெற்றியைப்பாடின் வாகைமாலையாம். ஆசிரியப்பாவால் வருவதெல்லாவற்றிற்குமொக்கும். (௩௧)

(தாரகைமாலை, மங்கலவள்ளை.)

ஓதுசந்தத்தாலுரைத்தலிலாண்டாரகைமாலை
கோதிலாக்கற்பிற்குலமகளை, நீதிசேர்
மங்கலவள்ளைவகுப்பொடுவெண்பாவால்
இங்காமொன்பானென்றிசை.

(எ-ன்.) தாரகைமாலையும், மங்கலவள்ளையுமுணர்த்துகின்றது. (இ-ள்.) அரசிப்படையைப் புகழ்ந்து வகுப்பால் ஒன்பது கவிபாடுவது தாரகைமாலையாம். கற்புடைமகளிரைப் புகழ்ந்து ஒன்பது வகுப்பும். ஒன்பது வெண்பாவுமாப்பாடுவது மங்கலவள்ளையாம். (எ-று.) அருந்ததிக்கற்பின்மகளிற்குள்ள இயற்கைக்குணங்களை வகுப்பாற்பாடுவது தாரகைமாலையென்பாருமுளர்.

(யானைவஞ்சி.)

இசைந்தவிலங்குலமொத்தவெழிலோ
டசைந்தபிராயத்தளவும், இசைந்தமதந்
துன்னவஞ்சிவீடுயிர்கோண்மன்னன்றொடர்ந்தணைத்தல்
சொன்னவஞ்சியானைத்தொழில்.

(எ-ன்.) யானைவஞ்சியியம்புகின்றது. (இ-ள்.) யானையதுபிறப்புங்குலமும், ஒத்தவழகும், பிராயமும், என்பவற்றினிலக்கண அளவும், மதந்துன்னின்விடத்தஞ்சிவிடுதலும், கொன்றுதிரிதலும், அதுகண்டரசனணைத்தலும், வஞ்சிப்பாவாற்சொல்லப்பட்டது யானை வஞ்சியாம்! (எ-று.) (௩௩)

(மெய்க்கீர்த்தி, கையறமோதாப்பா.)

தொழிலார்ந்தமெய்க்கீர்த்திசொற்சீரடியால்
எழிலரசர்செய்தியிசைப்பர், மொழியுங்கால்
கையறமோதார்கலிவஞ்சியென்றிவற்றாற்
பொய்தீர்ந்தநூலோர்புரிந்து.

(எ-ன்) மெய்க்கீர்த்தி நீர்மையுங்கையறமோதாப்பாவு முணர்த்துகின்றது. (இ-ள்.) ஆசிரியம்விரவிய சொற்சீரடிகளால் மன்னரதன்மைக் கீர்த்தியைத் தொடுத்துப்பாடுவது மெய்க்கீர்த்தியாம். கையறம் கலிப்பாவாலும், வஞ்சிப்பாவாலும் பாடப்படா. (௩௪)

(புகழ்ச்சிமாலை, நாமமாலை.)

புரிந்தமயக்கவடிவஞ்சியாற்பொய்தீர்
திருந்திழையார்சீர்பேர்சிறக்கத், தெரிந்துரைத்தால்
மன்னும்புகழ்ச்சிநன்மாலையாமைந்தர்க்காம்
பின்னுமமாலைப்பேர்பெற்று.

(எ-ன்.) புகழ்ச்சிமாலையும், நாமமாலையுமுணர்த்துகின்றது. (இ-ள்)அடிமயங்கிய வஞ்சிப்பாவால் கோற்றொடிமாதரைக் குணம் பெயரடுக்கிப் புகழ்ந்துபாடுவது புகழ்ச்சிமாலையாம். மேற்கூறியவாறே ஆடவரைப் புகழ்ந்து பாடுவது நாமமாலையாம். (எ-று.) (௩௫)

(வேறு இரட்டைமணிமாலை, வருக்கமாலை.)

பெற்றசீர்மன்விருத்தம்வெண்பாப்பெயர்ந்திருபான்
மற்றையிரட்டைமணிமாலையாம், பொற்றொடியாய்
மன்னகவலெட்டாய்வருக்கவெழுத்தான்வருமேல்
முன்வருக்கமாலைமொழி.

(எ-ன்.) இரட்டைமணிமாலையும், வருக்கமாலையுமுணர்த்துகின்றது. இ-ள். ஆசிரியவிருத்தமும், நேரிசைவெண்பாவுந்தம்முண்மாறி அந்தாதியாய் இருபது வருவது இரட்டைமணிமாலையாம். உயிர்வருக்கத்தேனும். கசதநபமவவென்னும் ஏழுயிர்மெய் வருக்கத்தேனும் அவ்வவ்வருக்கமுறையே யெட்டாசிரியம் வந்தால்வருக்கமாலையாம் (எ-று.) யகர ஞகரங்களை நீக்கியேழுயிர்மெய்யென்றது பிறர்நூன் முடிந்ததுதானுடன் படுதலென்னுந் தந்திரவுத்தி()

(செருக்களவஞ்சி, வரலாற்றுவஞ்சிமுதலியன)

மொய்யின்றிறம்வஞ்சிப்பாவின்முடித்துரைத்தல்
செய்யிற்செருக்களவஞ்சியாம், தையால்
வழியுரைத்தல்வஞ்சிவரலாறுமற்று
மொழியுரைத்தறன்பெயராமூண்டு.

எ-ன். செருக்களவஞ்சியும், வரலாற்றுவஞ்சியும் உரைத்து ஏனைவஞ்சிகளையுமாட்டெறிகின்றது. (இ-ள்.) செருக்களச்செய்தி களைவஞ்சிப்பாவாற் பாடிற் செருக்களவஞ்சியாம். ஒருபொருளின் வரலாற்றை வஞ்சிப்பாவாற் பாடின் வரலாற்றுவஞ்சியாம். ஏனைப்பொருள்களையும் வஞ்சிப்பாவாற்பாடின் அப்பெயரானே வஞ்சியென்று வழங்கப்படும். (எ-று.) (௩௭)

(பரணி.)

மூண்டவமர்க்களத்துமூரிக்களிறட்ட
ஆண்டகையைப்பரணியாய்ந்துரைக்க, ஈண்டிய
நேரடியேயாதியாநீண்டகலித்தாழிசை
ஈரடிகொண்டாதியுடனீறு..

(எ-ன்.) பரணியிலக்கணங்கூறுகின்றது. (இ-ள்.) செருக்களம்புக்குறுத்தனக் கூறுபாடின்றி மாற்றார்யானைபடப்போர்செய்தான் பரணிக்குப்பாட்டுடைத்தலைவனும். அவனைப்பாடுமிடத்து நாற்சீர்முதலாக ஏனைத்துச் சீரானும்

கலித்தாழிசையடித் தொகையிரண்டின் மேலெருமல், முதற்ெறுடங்கி முடிவளவும்பாடுக. (எ-று.) வெண்கலிப்பாவாற்பாடினுமிழுக்காது. (௩அ)

ஈறில்வணக்கங்கடைநிலம்பேயென்பனவும்
வீறுசாலையைக்குமெய்ப்பேய்கள், கூறித்
திறப்படச்சொல்லினவுஞ்செப்பிற்பிறவும்
புறப்பொருணூல்கொண்டுபுகல்.

(எ-ன்.) இதுவுமது! (இ-ள்.) பரணிபாடுமிடத்து, முற்படக்கடவுளை வாழ்த்தி, பின்புகடைதிறப்புக்கூறி, பாலைநிலத்தியல்புகூறி. காளிகோட்டம் பாடி, கழுதினுண்மைபழுதறக்கூறி, காளிக்குக்கூளிசொல்லுமாறும், அவளதற்குச் சொல்லுவனவுமாகிய பிறவும்புறப்பொருளிலக்கணத்தின் முறைமை தோன்றச்சொல்லுக. (எ-று.), பிறவுமென்றதனால். பாட்டுடைத்தலைவனைச் சிறப்பித்தலும், அவன் படையெடுத்துச் சென்றமுறைமையும், செருமுடித்தலும், கூழட்டன்முதலாயின வெல்லாங்கொள்க. (எ-று.) (௩௯)

(பெருங்காப்பியம்.)

புகரில்வணக்கம்பொருப்பறமேயாதி
பகர்தல்கடல்கோள்பருவம், நிகரில்
தலைவனைக்கூறறபனனிந்துதோற்றம்
சிலைமணந்தோர்போரின்செயல். (௪௰)

செயலார்முடிசூட்டல்சீர்ப்புதல்வர்ப்பேறூ
டயலார்பொழில்புனல்புக்காடல், இயலுமூண்
மந்திரந்தூதாடல்வருமிகல்விக்கிரமம்
சந்துசெலவும்பிறவுஞ்சார்ந்து. (௪௧)

சார்சுவையேபாவம்விளக்கியினத்தொடுபாக்
கூருறாயேபாடையேகொண்டிலம்பம், நேர்சருக்கம்
நீப்பில்பரிச்சேதநேர்ந்துவருமேற்பெருங்
காப்பியமாமென்றுகருது.

(எ-ன்.) பெருங்காப்பிய முணர்த்துகின்றது. (இ-ள்.) இம்மூன்று செய்யுளுக்கும் பொருள்விளங்கிக்கிடந்தமையின் பொருள்விரித்துக்கொள்க.(எ-று.) பொருப்பாதி, தசாங்கம். அறமாதி அறம், பொருள், இன்பம், வீடு. பருவம், கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில். தபனனிந்து தோற்றம், சந்திராதித்தர் தோற்றம். ஊண், காமபாணம், வீரபாணம். சுவை - சிங்காரம், பெருநகை, கருணை, வீரம், கோபம், பயம், அற்புதம், குற்சை, சாந்தம். (௪௨)

(காப்பியம்.)

கருதுசிலகுன்றினுமக்காப்பியமாமென்பர்
பெரிதறமேயாதிபிழைத்து, வருவதுதான்
காப்பியமாகுங்குலவரவுகாரிகை
யாப்பிற்புராணமேயாம்

(எ-ன்.) பெருங்காப்பியத்திஞெழிபும், காப்பியமும், புராணகதையுங்கூறுகின்றது. (இ-ள்.) பெருங்காப்பியத்திற்கு எடுத்தோதிய அறமுதனன்குமொழிந்தல்லாவுறுப்புகள் சிலகுறையினுமிழுக்காது. மேற்கூறியவற்றுள் தர்மார்த்த காம முத்தியெனு நான்கனுள் சிலகுறைந்து வந்தால், காப்பியமாம். குலவரவுமுதலாயினவற்றைக்காட்டுவது புராணகதையாம். (எ-று.) (சங)

ஆயவகப்பொருண்மேலாசிரியப்பாவினுள்
மேயசிர்வஞ்சியடிமேவாது, தூய
அகப்பொருண்மேலன்றியருங்கலிகள்வாரா
தொகப்பெருவஞ்சிதொடர்ந்து.

(எ-ன்.) அகப்பொருள்சொல்லும் ஆசிரியப்பாவிற்புகப்பெருவடியும், அகப்பொருண்மேன் மிகப்பெருகிவரும்பாவும், யாதானுமொரு பொருண்மேல் வரப்பெறும்பாவு முணர்த்துகின்றது. (இ-ள்.) அகப்பொருள்சொல்லுமாசிரியப்பாவில் வஞ்சியடிபுகுந்துவிரவப்பெறு அகப்பொருண்மேலன்றிக்கலிப்பா பெரும்பான்மையும் வரப்பெறு, வஞ்சிதனித்து நின்றுபொருள் சொல்லுந்துணையல்லது தொகையாவரப்பெறு. (எ-று.) (சச)

தொடர்ந்தபெயர்கடொழிலளவுகாலம்
இடம்பொருள்பாவுறுப்போடெல்லை, நுடங்கிடையாய்
பாடிஞன்பாடுவித்தான்பாடப்படுபொருளால்
நீடும்பிறவுநிறைந்து.

(எ-று.) அகலக்கவிக்குப் பெயர்வருமாறுணர்த்துகின்றது. (இ-ள்.) தொழிலானும், அளவானும், காலத்தானும், இடத்தானும், பொருளானும், பாவானும், உறுப்பானும், எல்லையானும், பாடிஞன்பெயரானும், பாடுவித்தான் பெயரானும், பாடப்படும்பொருளானும், பிறவாற்றானும், அகலக்கவிக்குப்பெயரிடப்படும். (எ-று.) அவற்றுள் யானைத்தொழிலென்னும் பெயர், தொழிலான் வந்தது. பன்னிருபடலம், நூற்றந்தாதி, குறுந்தொகை, நெடுந்தொகையென்பன அளவு பற்றிவந்தன. கார்நாற்பதுமுதலாயினகாலம் பற்றிவந்தன. களவழியும், ஐந்திணையும் இடம்பற்றிவந்தன. அகம்புறமென்பன பொருள் பற்றிவந்தன. கலித்தொகை, வெண்பா மாலை யென்பன பாப்பற்றிவந்தன. அங்கமாலை, நயனப்பத்து, பயோதரப்பத்து என்பன உறுப்புப்பற்றிவந்தன. பாதாதிகேசம் கேசாதிபாத மென்பன வெல்லைபற்றி வந்தன. தொல்காப்பியம், அவிநயம், கல்லாடமென்பன, பாடிஞனைப் பற்றிவந்தன. பாண்டிக்கோவை முதலாயின பாடுவித்தானைப்பற்றிவந்தன. வச்சுணந்திமாலைமன்ன. காந்தபுராணம், கூர்மபுராணமென்பன பாடப்படும் பொருள்பற்றிவந்தன. பிறவுமென்றதனுல் இடுகுறியாற் பெயர் பெற்றனவுமுள அவை கலைக்கோட்டுத்தண்டுமுதலியன. (சரு)

நிறைமதியாற்கல்வியானீள்கலைகள்கல்லா
தறையுமவன்கமகனுகும், முறைமேற்கோள்

புல்லுமெடுத்துக்காட்டேதுபுகலுவன்
நல்வாதியென்றேநவில்.

(எ-ன்.) கமகனையும், வாதியையுங்கூறுகின்றது. (இ-ள்.) தன்னுடைய ஞானவிசேடத்தாலேயாதல், கல்விப்பெருமையாலேயாதல், ஒருவன்சொல்லிய நூல்விகற்பத்தைத்தான் பயிலாதிருந்தும் பொருள்விரிக்க வல்லான் கமகனும். எடுத்துக்கொண்டகோளுக்குப் பொருந்தினமேற்கோளும், காரணமும், அவையிரண்டிற்கும் பொருந்தின எடுத்துக்காட்டுஞ் சொல்லிமுடிப்பான்வாதியாம்-எ-று. மேற்கோள், காரணம், எடுத்துக்காட்டென்னுத அம்முறையன்றிக்கூற்றால், விதண்டைவாதம், சர்ப்பவாதமென்னும் விகற்பவாதங்களுமுணர்ந்துகொள்க. (சரு)

நவிலுமறமுதனூன்கு மயங்காமற்
புவியதனிற்கேட்டோர்புகழக், கவிப்பனுவல்
குன்றுதசொல்லாற்றெளிவுபெறக்கூறுவோன்
நன்றுயவாக்கியென்றார்.

(எ-ன்.) வாக்கியிலக்கணம்வகுக்கின்றது. (இ-ள்.) அறம், பொருள், இன்பம், வீடென்பனதம்மில்விரவாமற்கேட்டோர்விரும்ப இலக்கணத்தையாதல், இலக்கியத்தையாதல், செஞ்சொல்லால்விளங்கச்சொல்லுவான்வாக்கி. எ-று.

ஆரொருவன்பாக்களையாங்கொருவனுக்களிப்போன்
சோரகவிசார்த்தொலியிற்சொல்லுமவன், சீரிலாப்
பிள்ளைக்கவிசிறந்தபின்மொழிக்காம்புன்மொழிக்காம்
வெள்ளைக்கவியதனின்வேறு.

(எ-ன்.) புன்கவிஞர்நாற்பகுதியரென்கின்றது. (இ-ள்.) ஒருவன்பாட்டைமற்றொருவனுக்குக்கொடுப்போன் கள்ளக்கவியாம். ஒருவன்கவியிசையில்வேறொருசெய்யுட்புணர்ப்போன் சார்த்துகவியாம், தனக்கெனவொன்றின்றி முன்னோர்மொழிந்த சொன்னடைபொருணடைகண்டு கவிபாடுவோன்பிள்ளைக்கவியாம். புன்மொழிகளாற்கவிபாடுவோன்வெள்ளைக்கவியாம். எ-று. (சஅ)

செய்யுளியல் முற்றிற்று.

# மூன்றுவதுபொதுவியல்.

வேறுமறையோராதிநாற்சாதிவெள்ளைமுதல்
கூறுநிலைமுல்லைகுறிஞ்சியே, மாறு
மருதநிலநெய்தனிறம்வான்மையேசெம்மை
கருதரியபொன்மையேகார்.

(என்பதுசூத்திரம்.) இவ்வியலென்னபெயர்த்தோவெனின், முதன்மொழியியலிற்கும், செய்யுளியலிற்கும் பொதுவாகியபொருளை யுணர்த்தினமையின் பொதுவியலென்னும் பெயர்த்து. இச்சூத்திரம் முற்கூறிப்போந்த ஆசுமுதலாகிய நான்குகவிகட்கு முதற்காரணமாயுள்ளவெண்பாமுதலிய நான்குபாவி

ற்கும், சாதியும், இடமும், நிறமுமுணர்த்து-ற்று. (இ-ள்.)வெண்பாமறையோர்சாதி; இதற்குநிலம்முல்லை. நிறம்வெண்மை. ஆசிரியப்இததிரற்ஆசசார்பா குநிலங்குறிஞ்சி, நிறஞ்செம்மை. கலிப்பாவணிகர்சாதி, இதற்குநிலம்மருதம், நிறம்பொன்மை. வஞ்சிப்பாசூத்திரசாதி,இதற்குநிலம்நெய்தல், நிறங்கருமை.

கார்த்திகைமாசிபனைகுன்றுதிகாட்டுகநாள்
மூத்தவிராசிநான்மூன்றினையும், நீர்த்தசீர்
மேதினிமேலாசிரியம்வஞ்சிகலிவெள்ளையென
ஓதியமேடாதியாலோட்டு.

(எ-ன்.) மேற்கூறியபாக்களின்நாளும், இராசியுமுணர்த்துகின்றது.(இ-ள்) கார்த்திகைமுதல் ஆயிலியமீறாகிய ஏழுநாளும், கர்க்கடகம், விருச்சிகம், மீன மென்னுமூன்றிராசியும், வெண்பாவிற்காம். மகமுதல்விசாகமீறாகிய ஏழுநாளும், மேஷம், சிங்கம், தனுசு, என்னுமூன்றிராசியும், ஆசிரியப்பாவிற்காம். அனுடமுதல் அவிட்டமீறாகிய ஏழுநாளும், மிதுனம், துலாம், கும்பமென்னுமூன்றிராசியும், கலிப்பாவிற்காம். சதயமுதல்பரணியீறாகிய ஆறுநாளும் இடபம், கன்னி, மகரமென்னுமூன்றிராசியும், வஞ்சிப்பாவிற்காம். எ-று. உ)

ஓட்டுமதிபொன்வெள்ளையொண்கதிரோன்சேயகவல்
காட்டியமால்காரிகலிக்காகும், மீட்டும்
புகர்பாம்புவஞ்சிக்காம்பூவிரையோடாடை
பகர்நிறத்தாற்கொள்கவணிபாட்டு.

(எ-ன்.) மேற்கூறியபாவிற்கு அதிதேவதையும், புஷ்பமும், சந்தனமும், ஆடையும், ஆபரணமும் உணர்த்துகின்றது. (இ-ள்.) வெண்பாவிற்குச்சந்திரனும், வியாழமும். ஆசிரியப்பாவிற்கு, ஆதித்தனும், செவ்வாயும். கலிப்பாவிற்குப்புதனும், சனியும். வஞ்சிப்பாவிற்குச்சுக்கிரனும், இராகுகேதுக்களும். அதிதேவதைகளாம். புஷ்பமும், சந்தனமும், வஸ்திரமும், ஆபரணங்களும், முன்சொன்னநிறப்பகுதியினாலேகொள்க. எ-று. (௩)

பாட்டுடையோனூர்ப்பேரியற்பேர்பட்டெதுகை
நாட்டிடினுமப்பேர்நவிலடியிற், காட்டுமுதற்
சேர்ந்தவனுவாகச்சீர்முன்னியற்றிடினும்
வாய்ந்தசிறப்பென்கைவழக்கு.

(எ-ன்.) பாடும்விதமுணர்த்து கின்றது. (இ-ள்.) பாட்டுடைத்தலைவன் ஊர்ப்பெயரினையாயினும், இயற்பெயரினையாயினும் அடிமுற்சீரிலே நிறுத்தி எதுகைத்தொடர்படவைப்பினும், வருக்கமுதலிய அனுவெதுகைத் தொடர்படவைப்பினுஞ்சிறப்பாம். (எ-று.) (௪)

வழக்குண்மரபியலுணோர்ந்துவழுவா
திழுக்கிவடவெழுத்தையின்பம், வழுக்காது
முன்னையோர்பாட்டிற்பயின்றமொழியன்றே
சொன்னவுறுப்பின்றுணிபு.

(எ-ன்.) உறுப்புச் செய்யுணெறியுணர்த்துகின்றது. (இ-ள்.) வழக்கினோடும், மரபியலோடும் பொருத்தமுடையவாய், வடவெழுத்துக்கலவாது கேட்டோர்க்கு மிகவுமின்பம் பூரிக்குஞ்சொல்லாகச்சான்றோர் செய்யுள்களில் எடுத்துக்காட்டுஞ் சொற்களாற்புணர்க்கப்படுவனஉறுப்புச்செய்யுளாம்.எ-று.()

துணிதற்கரிதுபொருளென்றுஞ்சோர்வு
பணிவுற்றசொன்மேற்பகுத்தும். அணிபொருட்டான்
மற்றுமுண்டென்றுமுறைப்போர்வழுச்சொல்லின்
இற்றன்றேபாவினிழுக்கு.

(எ-ன்.) குற்றப்படாமற் பாக்களைபுணர்க்கவென்கின்றது. (இ-ள்.) நிச்சயித்தற்கரிய பொருளுடையவாயினும், எடுத்தேறுபட்ட சொல்லுடையவாயினும், பலபொருளுக்கேற்ற சொல்லுடையவாயினும், பொருந்திற்குற்றமாம். (எ-று.) எடுத்தேறுசொல் - இடிபோன்றசொல். (கூ)

இழுக்கிலாநாற்குலத்தோரொப்பொருளுந்தேர்ந்தோர்
ஒழுக்கறந்தெய்வமுடையோர், விழுக்கவிகள்
ஈரிரண்டுமுத்தமிழும்வல்லோரோயெஞ்ஞான்றும்
சீரார்கவியுரைப்போர்சென்று.

சென்றவிருபான்றொடங்கிச்சேருமெழுபானளவும்
நின்றபருவத்துறுப்புநீங்காதோர், ஒன்றில்
அகலாப்பிணியில்லோரன்றேபாக்கொண்டு
புகலப்பெறுவார்புகழ்ந்து.

(எ-ன்.) அகலக்கவிபுகல்வோரிவரென்கின்றது. (இ-ள்.)இவ்விருசெய்யுளையும், விரித்துரைத்துக்கொள்.(எ-று.) இக்குணமில்லாதார் பாடலாகாதென்பதாம்.

புகழுந்தருமநெறிநின்றோர்பொய்காமம்
இகழுஞ்சினஞ்செற்றமில்லோர், நிகழ்கலைகள்
எல்லாமுணர்ந்தோரிருந்தவிடமன்றே
நல்லாயவைக்குநலம்.

(எ-ன்.) அகலக்கவிகேட்பிக்குநல்லவை, நிறையவையென்னு மிரண்டனுள், நல்லவை கூறுகின்றது.(இ-ள்.)இவ்விலக்கணமுடையோரவைநல்லவையாம்.

நலனடக்கஞ்செம்மைநடுவுநிலைஞானம்
குலனென்றிவையுடையோர்கோதில், புலனில்லோர்
சென்றுமொழிந்தனவுங்கேட்போர்செறிந்தவிடம்
அஃன்றேநிறைந்தவவை

(எ-ன்.) நிறையவை கூறுகின்றது.(இ-ள்.) இவ்விலக்கண முடையோரவை நிறையவையாம. (எ-று.) அவையுடையோரும்,குலனுடையோராதல்சிறப்பு.()

அவையின்றிறமறியாராய்ந்தமர்ந்துசொல்லார்
நவையின்றித்தாமுரையார்நாணுர், சுவையுணரார்

ஆுபகலைதெரியாரஞ்சாரவரன்றே
தீயவவையோர்செருக்கு.

(எ-ன்.) தீயவவையுரைக்கின்றது. (இ-ள்.) இவ்விலக்கணத்தையுடையோரவை தீயவவையாம். (எ-று.) இவர்முன்கவிகேட்பிக்க லாகாதென்பதாம்.

குன்றுநூலங்கமறைகோவணங்கோன்முத்தீயும்
நன்றுயவேள்விநளினமும், அன்றிக்
குடைசமிதைகுண்டிகைபுற்கோத்திரமென்றின்ன
உடையாரையந்தணரொன்றுன்னு. (௰உ)

உன்னலரன்கழலையோங்கியசீரங்கியயன்
என்னவுவமித்தலிவவொன்றே, நன்மறைகள்
ஓதலேயோதுவித்தல்வேட்டலேவேட்பித்தல்
ஈதலிரத்தலென்றேத்து.

(எ-ன்.) நாற்குலமென்றவற்றுள் அந்தணரியல்பு கூறுகின்றது. (இ-ள்.) இவ்விலக்கணமுடையோர் அந்தணராம். (எ-று.) (௰ங)

ஏத்தியபூவைநிலையெல்லோன்கழல்வாழ்த்தல்
காத்தன்முடிசூட்டல்களம்வேட்டல், தீத்தொழில்கள்
வெண்குடைசெங்கோல்கவரிவெற்றியரியாசனமும்
மண்குலவுமன்னர்வளம். (௰சு)

வளர்த்தல்குடிகமையஞ்சாதுரங்கம்வாய்மை
விளைத்தல்பொருணெறியாமெய்ந்நூல், அளத்தலே
உம்பருவமைபுரைகோளிவையுடையார்
இம்பருலகுக்கிறை.

எ-ன்.) மன்னரியல் புரைக்கின்றது. (இ-ள்.)இப்பெற்றியுடையோர் மன்னர்.

இறையஞ்சாதேருழல்வித்தீதல்புரிந்து
மறைகொண்டழல்வளர்த்துவாய்மை, பொறையுடைமை
என்றிவையுங்காத்துநிரையோம்பலென்பவே
குன்றுவணிகர்குணம்.

(எ-ன்.) பூவைசியர், தனவைசியரென்பவர்களுள் பூவைசியரியல்பு கூறுகின்றது. (இ-ள்) இப்பெற்றியுடையார் பூவைசியராம். எ-று. (௰சு)

குணங்கோடாக்காத்தல்கொழுநிதிக்கோன்றன்னை
வணங்கலவன்புகழேவாழ்த்தல், அணங்கார்
இடத்தேகிவாணிகத்தாலீட்டலெரிவேட்டல்
படைத்தோர்வணிகரென்பார்.

(எ-ன்.) தனவைசியர் செய்தி கூறுகின்றது. (இ-ள்.) இப்பெற்றியுடையோர் தனவைசியராம். (எ-று.) (௰எ)

பார்திகழுமூவர்பணித்தபணியொழுகல்
ஏருழுதலீதல்பிழையாமை, பார்புகழக்

கோட்டமிலாமைபொருமைக்குணம்பிறவும்
காட்டினார்சூத்திரர்தங்கண்.

(எ-ன்.) சூத்திரர் செய்தி கூறுகின்றது. (இ-ள்.) இப்பெற்றியுடையோர் சூத்திரராம். (எ-று.) (௰அ)

(சிறப்புப்பாயிரவிலக்கணம்.)

கண்ணுயதெய்வமிறைஞ்சிக்கருதுநூல்
பண்ணவதிகாரம்பாரித்தல், எண்ணும்
மதியோர்சிறப்பென்பர்வானவரைவாழ்த்தா
அதிகாரமுஞ்சிறப்பென்றாக்கு.

(எ-ன்.) அகலக்கவிக்கு இன்றியமையாத பாயிரங்களுள், சிறப்புப்பாயிரங் கூறும்வகை யுணர்க்கின்றது. (இ-ள்.) தெய்வவணக்கமும், அதிகாரமும், புணர்த்துரைப்பதும், அதிகாரமொன்றுமே யுரைப்பதுஞ் சிறப்புப்பாயிரமாம்.

ஆக்கியோன்பேர்வழியேயெல்லையாப்பந்நூற்
போக்கிடஞ்சொல்வோர்நுதலிற்றாயபயன். தாக்கியவிவ்
வெட்டினெடுங்காலங்களன்காரணமியம்பப்
பட்டாலுமப்பெயரேபன்னு.

(எ-ன்.) இதுவுமது. (இ-ள்.) ஆக்கியோன் பெயர் முதல், பயனீறாகிய எட்டுமுரைப்பதும், இவற்றுடன் காலங் களன்காரணமென்னு மூன்றுங்கூட்டி யுரைப்பதுஞ் சிறப்புப்பாயிரமாம். (எ-று.) (௰௯)

பன்னியநூற்பேர்பகர்ந்தோன்பேர்காரணமும்
துன்னும்பயனளவுஞ்சொல்லினும், முன்னைச்
சிறப்பாமவற்றுட்சிலவேறினும்
பெறப்படுமாமுன்னைப்பெயர்.

(எ-ன்.) இதுவுமது. (இ-ள்.) இவ்வைந்துங் கூறுவதும், இவற்றுடன், முன்னையவற்றுட் சிலவேறக்கூறுவதும், அச்சிறப்புப்பாயிரமேயாம். எ-று.

பொதுப்பாயிரத்திலக்கணம்.

பெயரார்நூலீவோனியல்பீயும்பெற்றி
அயராதுகொள்வோனளவும், அயர்வின்றிக்
கோடன்மரபீரிரண்டுங்கூறல்பொதுப்பாயிரமாம்
பாடல்சானூலின்பயன். (உக)

பயனுன்காய்மூவகைத்தாய்ப்பன்மூன்றுரைத்தாய்
இயலுடைத்தாய்மூவாமலேழு, செயன்மதத்தாய்ப்
பத்தாய்க்குணங்குற்றம்பத்தொழிந்தெண்ணான்கா
முத்தியதுநூலென்றுணர். (உஉ)

உரைத்தநதிசியமோடொண்பருந்துதேரை
நிரைத்ததொழிற்சூத்திரத்திலின்று, விரைக்குழலாய்

செம்பொருண்ஞாபகமாஞ்செய்திநியதியாம்
கம்பமிலா நூலின்கருத்து. (உ௩)

கருத்தெச்சநுட்பம்பொழிப்பகலங்காட்டி
உரைத்தவுதாரணமுமுண்டேல், விருத்தியாம்
பூண்டகருத்தும்பொழிப்புமுதாரணமும்
காண்டிகையென்றேதல்கடன்.

(எ-ன்.) பொதுப்பாயிர விலக்கணங் கூறுகின்றது. (இ-ள்.) இச்சூத்திரங்களை விரித்துரைத்துக்கொள்க. (எ-று.) (உ௪)

கட்டுமகரவாகாரங்கதிரோன்
உட்டுயெழுங்கடிகையோரா-றிட்டுகி
ஏனையுயிர்க்கூறுமிவ்வகையால்வந்துநித்தால்
ஆனமுதன்மூன்றுமழகு.

(எ-ன்.) அதலக்கவிகேட்கும் முகூர்த்த முணர்த்துகின்றது. (இ-ள்.) அகர ஆகாரமும். இகர ஈகார, ஐகாரமும், உகர ஊகார, ஔகாரமும், எகர ஏகாரமும், ஒகர ஓகாரமும், முறையே உதயாதி அவ்வாறு நாழிகையதிக்கும், இவற்றுள் - முதன் மூன்று நாழிகையும், உத்தமம், பின்மூன்றுநாழிகையுமாகாது. (எ-று.) இவ்வைந்துகூற்றெழுத்துகளை முதலிலுடைய பாக்களுக்குச்சொன்னகாலத்தில் முற்கூற்றிலரங்கேற்றுக வென்பதாம். (உ௫)

அழகாகமுன்மொழிக்கணுராய்ந்தனவும்
அழகாகச்சொல்லினவுமன்றி, அழகாகச்
செய்யுட்குரைத்தனவுமெல்லாஞ்செயிர்தீரச்
செய்யினன்றன்றுயிற்றீது

நிதிலா நூலுரைத்தநீதிலாச்செய்யுளைத்
நீதிலோர்நல்லவையிற்சேர்த்ததற்பின், ஆதிசால்
பாவிற்கியையவுரைக்கிற்பலபொருளும்
தாவில்பொருளோடுஞ்சார்ந்து. (உஎ)

சாந்தின்மெழுகித்தரளத்திரள்பரப்பிக்
காந்திமணிகனகங்கண்ணுறீஇ, வாய்ந்தலர்ந்த
தாமமுநாற்றிவிளக்கிட்டுச்சாறவிசில்
நாமகளையேற்றுவித்தனன்கு. (உ௮)

நன்குணர்ந்தோராய்ந்ததமிழ்நூலினன்னெறியை
முன்புணர்ந்துபாட்டியனூன்முற்றுணர்ந்து, பின்புணரும்
நல்லார்முன்னல்லாய்நலமார்கவியுரைக்க
வல்லாதலன்றேமதி. (உ௯)

பொதுவியன் முற்றிற்று.

"என்களங்கம்யாவையுநீக்கியினிதருளி
நன்களந்தைந்நூலோடுநாட்டுவரால், தென்களந்தை
மன்பெயரான்வண்புகழான்வச்சணந்திமாமுனிவன்
தன்பெயரானாட்டுந்தமிழ்.

இஃது - அவையடக்கம்.

வச்சணந்திமாலை முற்றிற்று

# "வரையறுத்தபாட்டியல்.

கட்டளைக்கலித்துறை.

பார்கொண்டசோதியன்சம்பந்தமாமுனிபாதமலர்
நேர்கொண்டிறைஞ்சிநிகழ்த்துகின்றேனெடுநூல்சுருக்கி
ஏர்கொண்டசொற்புலவோர்செய்தபாட்டியல்கற்கமிக்க
சீர்கொண்டமாமதியில்லாதவர்க்குத்தெரிவுறவே. (க)

தெரியாதுவந்தவழியடையாளஞ்சிலர்தமக்கு
மரியாதையின்றென்மதியின்மையாற்சொன்மழலைப்புன்சொல்
பெரியோர்பொறுப்பர்தம்பேரறிவாண்மையும்பேதைமைபோய்
விரியாதவென்னறிவின்மையும்பாரில்விளங்குதற்கே. (உ)

விளக்கியமங்கலமேமுதலாகவிரித்தபத்தும்
துளக்கறநாடும்பொருத்தமன்றேயெல்லைசொல்லறியா
உளக்கவிவாணரெனைப்போலநாடொறுமுண்பொருட்டால்
வளக்கவிபாடிப்பிழைப்பதிந்நூலின்வரும்பயனே. (௩)

(சீர், எழுத்து.)

வருகின்றமங்கலச்சொல்லினுட்சீர்கொள்கவாய்ந்தகக்கா
அருகொன்றுகிக்கீசொச்சோக்கள் நந்நாவொடுத்தநிந்நீ
தருகின்றயாவொடுவ்வ்வாவிவ்வீப்பெயர்தங்களுக்கு
முருகொன்றெழுத்துநுந்நூயூப்பெயர்க்குமொழியநன்றே.

(எ-ன்.) சீர், எழுத்து, என்னு மிரண்டு மங்கலச்சொல்லிற்குப் பொருந்திய பெயர்களையுணர்த்து தனுதலிற்று. (இ-ள்.) க, கா, கி, கீ, சொ, சோ, ந, நா, நி, நீ, யா, வ, வா, வி, வீ. என்னு எழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குச் சீரென்னுமங்கலச் சொல்லால், சீர்கொண்ட, சீர்தந்த, சீரோறு எ-ம்.நு, நூ,யூ, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்கு,எழுத்தென்னு மங்கலச்சொல்லால், எழுதரிய, எ-ம்.பாவிற்கிடைந்தபடிபாடுகவு-று.

(பொன், பூ.)

மொழிபொன்குக்கூவுஞ்சௌகாரந்துத்தூவுமுரணிதெத்தே
அழிவில்நெந்நேயொடுபுப்பூமெம்மேயொடகன்றமொம்மோ
வழுவில்மௌகாரப்பெயர்க்குறைபூக்கொண்டிசைக்கசௌசை
வழிகொண் மம்மாமிம்மீமும்முவைகாரவெளகாரங்கட்கே.

(எ-ன்.) பொன், பூவென்னு மிரண்டுமங்கலச் சொல்லிற்குப் பொருந்திய பெயர்களையுணர்-ற்து. (இ-ள்.) கு, கூ, சௌ, து, தூ, தெ, தே, நெ, நே, பு, பூ,மெ, மே, மொ, மோ, மௌ, என்னு மெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குப் பொன்னென்னும் மங்கலச் சொல்லால், பொன்னூதும், பொன்கொண்ட, பொன்பயில், பொன்வளர், பொன்கிளர். எ-ம். கௌ, சை, ம, மா, மி, மீ, மு, மூ, வை, வௌ, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குப் பூவென்னுமங்கலச்சொல்லா, பூக்கொண்டு, பூமேவு, பூவணி, எ-ம். பாவிற்கியைந்தபடிபாடுக. எ-று. (ரு)

(திரு, திங்கள், மணி, நீர்.)

வௌவுந்திருத்திங்களென்சொற்கள்கொக்கோவரும்பெயர்க்காம்
செவ்வுண்மணிச்சொற்கெக்கேப்பெயர்க்காஞ்செழுநீர்ச்சொற்கையோ
டிவ்வுஞ்சிச்சீயொடுதித்தீத்தைநொந்நோவுடனிசையக்
கௌவும்பைகாரப்பெயர்க்குநன்றும்படிகட்டுரையே.

(எ-ன்.) திரு, திங்கள், மணி, நீர், என்னு நான்கு மங்கலச்சொல்லிற்குப் பொருந்திய பெயர்களை யுணர்-ற்று. (இ-ள்.) கொ, கோ, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குத் திருவென்னு மங்கலச்சொல்லால், திருமகள், திருவளர், திருப்பதி, திருமல்கு, திருமன்னு, எ-ம். திங்களென்னும் மங்கலச்சொல்லால், திங்களூர், திங்களால், எ-ம். கெ, கே, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்கு மணியென்னு மங்கலச்சொல்லால், மணிவளர், மணிதிகழ், மணிமேவு, மணிமன்னு, மணிதங்கு, எ-ம், கை, சி, சீ, தி, தீ, தை, நொ, நோ, பை, என்னு மெழுத்துகளை முதலாகவுடையபெயர்களுக்கு நீர் என்னுமங்கலச்சொல்லால், நீர்கொண்ட, நீர்மேவு, நீர்கிளர். எ-ம். பாவிற்கியைந்தபடிபாடுக. எ-று. (சு)

(சொல், கங்கை, வாரணம்.)

கட்டுரைசொற்கொளௌகாரஞ் சுச்சுக்கள்செச்சேக்கள்தௌநௌ
ஒட்டுரைபேர்க்கினிதாங்கங்கைஅஆஒஓக்கள்தத்தா
விட்டுரைதொத்தோவிழையோப்பெயர்க்குயுர்யானையின்பேர்ப்
பட்டுரைவாரணங்கொண்டுஞெஞொப்பெயர்பாடுகவே.

(எ-ன்.) சொல், கங்கை, வாரணம் என்னு மூன்று மங்கலச்சொல்லிற்குப் பொருந்திய பெயர்களையுணர் - ற்று. (இ-ள்.) ஔ, சு, சூ, செ சே தௌ, நௌ, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்கு, சொல்லென்னு மங்கலச்சொல்லால், சொற்கொண்ட எ-ம். அ, ஆ, ஒ, ஓ, த, தா, தொ, தோ யோ, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்கு கங்கையென்னு மங்கலச் சொல்லால், கங்கைசூழ், கங்கைநீர், கங்கைசேர், எ-ம். ஞெ, ஞொ, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குவாரண மென்னு மங்கலச்சொல்லால், வாரணஞ்சூழ். எ-ம். பாவிற்குப் பொருந்திய வாறுபாடுக எ-று. கங்கை யென்னு மங்கலச் சொல்லுக்குப் பரியாயமாக கடல் காரென்னு மங்கலச்சொற்களைக் கொண்டு கடல்செறி, கடல்வளை எ-ம். கார்கொண்ட, காரேறு. எ-ம். பாடினுமிழுக்காது. (எ)

(குஞ்சரம், உலகு, பார்.)

பாடியர்குஞ்சரம்இஈயுஞாவும்பகர்பெயர்க்காம்
நீடுலகங்கொடுப்பபாப்பெயர்க்குநிரந்துரைக்க
பீடுறுபார்கொடுசச்சாப்பெப்பேயொடொளிர்ந்தபொப்போ
நாடுவெவ்வேமுதனண்ணியபேர்க்குநயந்துரையே.

(எ-ன்) குஞ்சரம், உலகு, பார் - என்னு மூன்று மங்கலச் சொல்லிற்குப் பொருந்திய பெயர்களையுணர் - ற்று. (இ-ள்.) இ, ஈ, ஞா, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குக் குஞ்சரமென்னு மங்கலச்சொல்லால், குஞ்சரஞ்செறி, குஞ்சரம்பின், குஞ்சரம்பொலி, எ-ம். ப, பா, என்னும் எழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்கு உலகென்னு மங்கலச்சொல், லால், உலகெலாம். எ-ம். ச, சா, பெ, பே, பொ, போ, வெ, வே, என்னுமெழுத்துகளை முதலாகவுடைய பெயர்களுக்குப் பாரென்னு மங்கலச் சொல்லால், பார்கொண்ட, பார்மேவு. எ-ம். பாவிற்குப் பொருந்திய வாறு பாடுக. எ-று. (அ)

(தேர்.)

உரைதருதேர்கொடுஉஊஎஏ[illegible]புவந்தநைமை
விரைதருபேர்கட்குநேரோவிளம்புகமேவுதண்ணீர்த்
திரைதருவேலையுடனேசெஞ்சேலையுஞ்சேரவென்று
வரைதருமஞ்சனந்தோய்ந்தரிசிந்தியவாள்விழியே.

(எ-ன்.) தேரொன்னுமங்கலச்சொல்லிற்குப் பொருந்திய பெயர்களையுணர்-ற்று. (இ - ள்.) உ, ஊ, எ, ஏ, ஐ, நை, மை, என்னுமெழுத்துகளை, முதலாகவுடைய பெயர்களுக்குத் தேரொன்னு மங்கலச்சொல்லால். பாவிற்குப்பொருந்திய வாறுபாடுக. (எ-று.) மேவுதண்ணீர் — வாள்விழியே. எ-து. மகடூஉமுன்னிலை. (க)

வாளாவுரைப்பிற்றென்னூலோர்வகுத்தவருணமுண்டி
கேளார்ந்தநல்லகதிகணமாய்ந்துரைகேழ்கிளரத்
தாளார்கமலமுநீலமும்போன்றுதருக்கிமுட்டி
நீளாமதர்த்தரிசிந்தியவாட்கணிரைவளையே.

(எ-ன்.) இந்நூலினொழிபு கூறுகின்றது. (இ-ள்.) இச்செய்யுளுக்குப் பொருள் விளங்கிக்கிடந்தமையின் விரித்துரைத்துக்கொள்க. எ-று. (ய)

வரையறுத்தபாட்டியல் - முற்றிற்று.